23

# நீங்கள் நினைப்பதை விட நீங்கள் அதிகம் மதிப்பு வாய்ந்தவராக இருக்கின்றீர்கள்

## மத்தேயு 5:13, ஒரு ஆழ்ந்த கண்ணோட்டம்

*உப்பையும் வெளிச்சத்தையும் பிரதிநிதிப்படுத்துவதற்காக உங்கள் முன்பாக கொஞ்சம் உப்பையும், ஒரு மெழுகுவர்த்தியையும் வைப்பதாகக் கற்பனை செய்து பார்க்கின்றேன். உப்பும் வெளிச்சமும் இந்தப் பூமியில் உள்ள மிகவும் பொதுவான சாதாரணமான பொருட்களில் இரண்டாக உள்ளன. உலகின் எந்தப் பகுதிக்கு நீங்கள் சென்றாலும், நீங்கள் உப்பையும் வெளிச்சத்தையும் காண்பீர்கள்.*

*இவைகள் இயேசுவின் நாட்களிலும் சாதாரணமான பொருட்களாகவே இருந்தன. இயேசு, ஒரு சிறுபையனாக இருந்தபோது ஒவ்வொரு நாளும் தமது தாயார் உணவில் உப்பிடுவதையும், ஒவ்வொரு இரவும் அவர் தமது சிறு விளக்குகளை எரிய விடுவதையும் பார்த்திருப்பார். ஆயினும் அவைகள் எவ்வளவு சாதாரணமானவைகளாய் இருந்த நிலையிலும் இயேசு கிறிஸ்தவர்களுக்கு அவர்களுக்கான மாபெரும் பாராட்டுரைகளில் ஒன்றைக் கொடுப்பதற்கு - மற்றும் அவர்களுக்கு மாபெரும் அறைகூவல்களில் ஒன்றை முன்வைப்பதற்கு - உப்பையும் வெளிச்சத்தையும் பயன்படுத்தினார்:*

> *நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப் போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.*
>
> *நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்க மாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்*

*திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது (மத். 5:13-16).*

*இந்த வசனங்கள் மலைப் பிரசங்கத்தின் இரண்டாவது பிரதான பிரிவாக உள்ளன. அப்பொழுதுதான் கிறிஸ்து தமது சீஷராயிருப்பதற்கான பண்புகளின் வகையை வரைக்குறிப்பிடும் பாக்கிய வசனங்களைக் கொடுத்திருந்தார். அடுத்து, அவர் "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்"; "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்று கூறுகையில், அந்தப் பண்பின் செயல் விளைவைப்பற்றி எடுத்துரைத்தார். இது ஒருவேளை, கிறிஸ்தவரின் செல்வாக்கின் வல்லமையைப் பற்றி வேதாகமத்தில் காணப்படுகிற மாபெரும் வசனப் பகுதியாக இருக்கலாம்.*

*நான் சிலவேளைகளில் இந்தப் பாடத்தை, ''உங்களை நீங்கள் குறைவான விலைக்கு விற்று விடாதீர்கள்'' என்று தலைப்பிட்டு அழைப் பதுண்டு.[1] நீங்கள் உங்களைப் பற்றி முக்கியமற்றவராக நினைக்கலாம், ஆனால் நான் உங்களுக்குச் சிலவற்றைச் சொல்ல என்னை அனுமதியுங்கள்: உப்பும் வெளிச்சமும் மாபெரும் முக்கியத்துவம் உடையவைகளாக இருந்தன மற்றும் இருக்கின்றன. இயல்பான உடல் செயல்படுவதற்கு உப்பு தேவைப்படுகிறது,[2] மற்றும் இயல்பான வாழ்வானது வெளிச்சமின்றி இருக்க முடியாது. சூரியன் திடீரென்று ஒழிந்துபோய்விடும் என்றால், ஒரு சில மணிநேரங்களில் நமது [பூமியென்ற] கோளானது பனிக்கட்டியினால் மூடப்பட்டுவிடும். நீங்கள் கிறிஸ்தவர் என்ற வகையில் உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்கின்றீர்கள் என்று இயேசு கூறியபோது, நீங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் - மற்றும் அவரது நோக்கமானது நீங்கள் இல்லாமல் நிறைவேற்றப்பட முடியாது - என்று கூறினார்.*

*நீங்கள் உட்பட ஒவ்வொரு நபரும் செல்வாக்கு உடையவர்களாய் இருக்கின்றோம். மிகச் சிறிய முடிகூட ஒரு நிழலை வீசுகிறதுபோல, மிகச் சிறிய கூழாங்கல் கூட தண்ணீரில் வட்டலைகளுக்குக் காரணமாயிருப்ப தைப் போல, நீங்கள் செல்வாக்கு உடையவர்களாய் இருக்கின்றீர்கள் - மற்றும் அந்த செல்வாக்கானது இயேசுவுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அவர் விரும்புகின்றார்.*

*நீங்கள் ஆண்டவருக்கு எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதைக் காண்பதற்கு இப்போது நாம் நமது வேத பாடப் பகுதிக்குச் செல்வோம். இந்தப் பிரசங்கத்தில், நாம் பூமிக்கு உப்பாக இருத்தல் பற்றிக் கலந்துரை யாடுவோம். அடுத்த பிரசங்கத்தில், நாம் உலகத்திற்கு வெளிச்சமாக இருத்தல் பற்றிப் பேசுவோம்.[3]*

## ஒரு பாராட்டு

*"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று இயேசு கூறியபோது, அவரது வார்த்தைகள் முதலாவதாக ஒரு பாராட்டாக இருந்தன. இதில்தான் நாம் ''அவர் பூமிக்கு உப்பைப் போன்றவர்'' என்ற சொல்வழக்கைப் பெறுகின்றோம்.[4]*

*இயேசு இந்தப் புகழுரையை யூதத்துவ மார்க்கத் தலைவர்களை நோக்கியோ அல்லது ரோம அவையினரை நோக்கியோ அல்லது அத்தேனே நகரத்துத் தத்துவ அறிஞர்களை நோக்கியோ கூறவில்லை, ஆனால் அவர் தமது உரையைக் கேட்டுக்கொண்டிருந்த பின்வரும் மக்களைப் பார்த்துக் கூறினார்: விவசாயிகள், மீனவர்கள், வர்த்தகர்கள், மற்றும் அவர்களின் மனைவியர்கள், பிள்ளைகள். இந்த உலகத்தாரால் "சாதாரண மக்கள்" என்று அழைக்கப்பட்டவர்களை அவர் புகழ்ந்தார்.*

*"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்ற கூற்றானது, பூமியைப் பற்றிச் சிலவற்றைக் கூறுகிறது, மற்றும் இது கிறிஸ்துவைப் பின்பற்றுபவர் களைப் பற்றிச் சிலவற்றைக் கூறுகிறது. இவ்வார்த்தைகளின் முக்கியத்து வத்தை மதிப்பதற்கு, நாம் வேதாகமம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலங்களில் உப்பின் செயலை/பணிப்பாங்கைக் குறித்துப் புரிந்துகொள்ள வேண்டும்.*

**உப்பு மதிப்புமிக்கதாக இருந்தது**

*இயேசுவின் நாட்களில் உப்பானது மதிப்புள்ளதாகக் கருதப்பட்டது. இது [பண] பரிமாற்றத்தின் ஊடகமாகவோ அல்லது ஊதியங்களை கொடுப்பதற்கோ பயன்படுத்தப்பட்டது. இதுவே, "அவர் தமது உப்பிற்குத் தகுதியானவர்" என்ற சொல்வழக்கின் ஆதாரமூலமாக உள்ளது.[5]*

*இயேசு, "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று கூறினார் - மற்றும் உப்பு மதிப்பைக் கொண்டுள்ளது. இது பூமியைப்பற்றி என்ன கூறுகிறது? இது இந்த பூமி உண்மையான மதிப்பு எதையும் கொண்டிருப்ப தில்லை என்று கூறுகிறது. இது கிறிஸ்தவர்களைப் பற்றி என்ன கூறுகிறது? இது கிறிஸ்தவர்கள் மதிப்பை/தகுதியைக் கொண்டுள்ளார்கள் என்று கூறுகிறது - மற்றும் இந்த உலகத்தின் ஒரே முக்கியத்துவமானது கிறிஸ்தவர்கள் இந்த உலகத்தில் இருக்கிறார்கள் என்பதாலேயே வருகிறது.*

*நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருந்தால், நீங்கள் தேவனுடைய கண்களில் மதிப்புள்ளவராக இருக்கின்றீர்கள். உங்களை நீங்களே குறைந்த விலைக்கு விற்றுப் போடாதீர்கள்.*

**உப்பு ருசியைக் கொடுத்தது**

*இன்றைய நாட்களில் போலவே அன்றைய நாட்களிலும், உணவிற்கு ருசியைக் கூட்டுதல் என்பது உப்பின் பயன்பாடுகளில் ஒன்றாயிருந்தது. யோபு, "ருசியில்லாத பதார்த்தத்தை உப்பில்லாமல் சாப்பிடக்கூடுமோ? முட்டையின் வெள்ளைக்கருவில் சுவை உண்டோ?" என்று கேட்டார் (யோபு 6:6). பின்பு அந்த முற்பிதா, உப்பில்லாத உணவை "அரோசிகமான போஜனம்" என்று அறிவித்தார் (வ. 7).[6]*

*பின்வரும் கதையானது, உப்பின் மாபெரும் மதிப்பிற்கான விவரிப்பாக உள்ளது:*

> *ஒரு அரசர் தமது மூன்று மகள்களிடத்திலும், தம்மை அவர்கள் எவ்வளவாக அன்புகூருகின்றார்கள் என்று கேட்டார். அவர்களில்*

*இருவர், தாங்கள் அவரை இந்த உலகத்தில் உள்ள எல்லா பொன் வெள்ளி ஆகியவற்றைவிட அதிகமாய் நேசிப்பதாகப் பதில் அளித்தார்கள். எல்லாருக்கும் இளைய மகள், தான் அவரை உப்பைக் காட்டிலும் அதிகமாய் நேசிப்பதாகக் கூறினாள். உப்பானது நாவிற்கு மிகவும் இனிமையானதாக இல்லை என்பதால், அரசர் அந்தப் பதிலில் திருப்தியடையவில்லை. ஆனால் அந்த விமர்சனத்தை மறைவாய் இருந்து கேட்டுக் கொண்டிருந்த சமையல்காரர், அடுத்த நாள் காலை உணவு எதிலும் உப்பிடாமல் இருந்தார், அந்த உணவு அரசரால் மகிழ்வுடன் அனுபவிக்கக் கூடாதபடிக்கு சுவையற்றதாகிப் போயிற்று. பின்புதான் அவர் தமது ன்இளையதி மகளின் குறிப்புகளில் இருந்த வலிவைக் கண்டார். அவள், அவரின்றி எதுவும் நன்றாயிருக்காது என்ற வகையில் அவர்மீது அன்புகூர்ந்திருந்தாள்.*[7]

*"உப்பில்லாத" உணவை மட்டுமே உண்டு வாழவேண்டிய நிலையில் உள்ளவர்கள், உப்பைச் சேர்க்காமல் உணவின் ருசியை மேம்படுத்துவது எப்படி என்று போராடிக் கொண்டுள்ளார்கள். உப்பானது உதவிக்குப் பதிலீடாகச் செயல்படுகிறது, ஆனால் "கொஞ்சம் உப்புப் போடுதல்" என்பதைக் காட்டிலும் செயல்வலிவானது வேறு எதுவும் இல்லை.*

*"நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" - மற்றும் உப்பு ருசியைக் கூட்டுகிறது. இது பூமியைப் பற்றி என்ன கூறுகிறது? இது, இந்த பூமியானது சுவையற்றதாக உள்ளது என்று கூறுகிறது, நீண்ட கால ஓட்டத்தில், உலகில் உள்ள ஒவ்வொன்றும் சுவையற்றதாகிவிடுதலே நடக்கிறது.*[8] *இது கிறிஸ்த வராகிய உங்களைப் பற்றி என்ன கூறுகிறது? இது, நீங்கள் வாழ்வுக்குப் பெருமகிழ்வைத் தருவதாகக் கூறுகிறது. உங்களை நீங்களே குறைந்த விலைக்கு விற்றுவிடாதீர்கள்.*

***உப்பு பல்வகைப் பயன்பாடுகளைக் கொண்டிருந்தது***

*உப்பின் மதிப்பைப் பற்றி இன்னும் அதிகமாய்க் கூறமுடியும். எடுத்துக் காட்டாக, உப்பானது தாகத்தை ஏற்படுத்த முடியும். நீங்கள் அநேகமாக, "குதிரையை நீங்கள் தண்ணீருக்கருகில் நடத்திச் செல்ல முடியும், ஆனால் குதிரையை நீங்கள் தண்ணீர் குடிக்க வைக்க முடியாது" என்ற சொல் வழக்கைக் கேள்விப்பட்டிருக்கலாம்.*[9] *அந்தக் கூற்றுக்கு ஒரு பிற்சேர்க்கை அவசியமாக உள்ளது: "... ஆனால் குதிரைக்கு நீங்கள் உப்பை ஊட்ட முடியும்." நான் சிறு பையனாக இருந்தபோது, விலங்குகளைச் சந்தைகளில் காட்சிக்கு வைக்கும் வேளையில் அவ்வப்போது இதை நான் செய்திருக்கின் றேன். எனது காட்சி விலங்குகளில் ஒன்று மெலிந்துபோய்க் காணப்பட்ட தென்றால், அதற்குப் போடும் உணவில் நான் சிறிதளவு உப்பைப் போடுவேன். இது அந்த விலங்கை அதிகமாகத் தண்ணீர் குடிக்கச்செய்து உப்ப வைத்து விடும். இது நமக்கு நடைமுறைப்படக் கூடும்: கிறிஸ்தவர்கள் என்ற வகையில், நாம் நடத்தும் வாழ்க்கையினால் [பிறருடைய இருதயங் களில்] ஜீவதண்ணீருக்கான தாகத்தை ஏற்படுத்த முடியும் (யோவா. 4:10-15).*

*மேலும் இயேசுவின் நாட்களில் உப்பானது சிலவேளைகளில் தூய்மையின் அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டது. மற்றும், இது*

யூதர்களின் பலிகளில் சேர்க்கப்பட்டது (லேவி. 2:13). இவை யாவும் கிறிஸ்தவர்களின் மதிப்பைப் பற்றிச் சிலவற்றைக் கூறுகிறது.

**உப்பு ஒரு பதனப் பொருளாக இருந்தது**

பதனப் பொருள் என்ற வகையிலான உப்பின் பயன்பாடானது, வேதாகமம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், உப்பின் மிக முக்கிய மான பயன்பாடாகவும், அதற்கு அதன் மாபெரும் மதிப்பைக் கொடுத்த தாகவும் இருந்திருக்கலாம். அந்த நாட்களில், நீங்கள் ஒரு நகரத்திற்குச் சென்று இறைச்சியைக் குளிர்ச்சியாகவும் புதியதாகவும் காத்துக் கொள்ளக் கூடிய ஒரு குளிர்பதனப் பெட்டியையோ அல்லது ஒரு உறைநிலைப் பெட்டியையோ வாங்க முடியாது. புதிய இறைச்சியானது விரைவிலேயே கெட்டுப் போகக்கூடியதாக இருந்தது; அதுவே இறைச்சியின் இயல்பாக இருக்கிறது.[10]

நான் வளர்ந்துகொண்டிருந்த வேளையில், என் குடும்பத்தார் நான் இன்றும் நினைவுகூர்ந்துள்ள ஒரு விடுமுறைப் பயணத்தை மேற் கொண்டார்கள். (நாங்கள் உறவினர்களின் வீடுகளுக்கு அவ்வப்போது செல்லுவதுண்டு, ஆனால் அதை நான் விடுமுறைப் பயணமாகக் கருதுவதில்லை.) இந்தப் பயணத்திற்கு நாங்கள் காரில் ஏறி கிழக்குமுகமாய்ச் சென்றோம், கிழக்கு ஓக்லஹாமா மற்றும் அர்க்கன்சாஸின் பகுதிகள் ஆகியவற்றில் பயணம் செய்தோம். நாங்கள் சென்றிருந்தபோது, எரிவாயுக் கம்பெனிக்காரர்கள் எரிவாயுக் குழாய்களில் பழுது நீக்கும் பணிக்காக அக்குழாய் இணைப்புக்களை எரிவாயு வராதபடி அடைத்து வைத்திருந் தார்கள் - எங்களிடத்தில் எரிவாயுவைக் கொண்டு வேலை செய்யும் ஒரு குளிர்சாதனப் பெட்டி இருந்தது. நாங்கள் வீடு திரும்பியபோது, எங்கள் குளிர்பதனப் பெட்டியில் இருந்த அத்தனை உணவு வகைகளும் கெட்டுப் போயிருந்தது. எனது தாயார், அந்தக் குளிர்பதனப் பெட்டியில் இருந்து துர்நாற்றத்தைப் போக்குவதற்குத் தம்மால் முடிந்த எல்லாவற்றையும் செய்தார். அது தனது கதவுகள் திறந்திருக்க, எங்கள் வீட்டின் புழக்கடை யில்/பின்பகுதியில் பல வாரங்களாகக் கிடந்தது, அதன் துர்நாற்றம் போகவேண்டும் என்பதற்காக என் தாயார் காத்திருந்தார். [அதற்குப்பின்பு] நாங்கள் அந்தக் குளிர்பதனப் பெட்டியை வைத்திருந்த நாட்களில் எல்லாம், அது ஒரு தனிப்பட்ட வகையான, காரமான நெடியைக் கொண்டிருந்தது.

எனது நண்பர்களில் ஒருவர் கேரி என்ற பெயருடைய இளைய மகனைக் கொண்டிருந்தார். ஒருமுறை அவன் வீட்டில் தனியாக இருந்த போது, அவன் டூனா (மீன்) சான்ட்விட்ச் என்ற உணவு வகையைத் தயாரிக்க முடிவு செய்தான். அவன் அதற்காக டூனா மீன் அடங்கிய டாப்பாவைத் திறந்தபோது, அது தரையில் விழுந்தது, டூனாவும் எண்ணெயும் தரையில் விரித்திருந்த கம்பளம் முழுவதிலும் சிந்தியது. கேரி, தான் செய்திருந்ததைப் பெற்றோர்கள் அறிவதை விரும்பவில்லை, எனவே அவன் வெற்றிடத்தி னால் சுத்தம் செய்யும் கருவியை அதன் உறையில் இருந்து எடுத்து, அதைக் கொண்டு டூனாவை உறிஞ்சிச் சுத்தம் செய்தான். பின்பு அந்தக் கருவியை அதன் உறையில் இட்டு வைத்து விட்டான். நாட்கள் சென்றபோது, ஒரு

*விளங்காத, குமட்டத்தக்க நாற்றம் வீடெங்கும் நிரம்பிற்று - கடைசியில் அது எங்கிருந்து வந்ததென்று கண்டுபிடிக்கப்பட்ட வரையிலும் அது வீடெங்கும் துர்நாற்றமாய்ப் பரவிற்று.*

*இறைச்சியானது விரைவில் கெட்டுப்போகிறது என்று கூறும்போது, நான் எதை அர்த்தப்படுத்துகின்றேன் என்பதை நீங்கள் அறிகின்றீர்கள். இறைச்சியானது விசேஷித்த தயாரிப்பில்லையேல் புதியதாய் நிலைத்திருப்ப தில்லை [கெட்டுப்போகிறது].*

*வேதாகமம் எழுதப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் மக்கள் இறைச்சியைப் பதனப்படுத்துவதற்கு என்ன செய்தார்கள்? அதில் அவர்கள் உப்பை வைத்துத் தேய்த்தார்கள். மீனவர்கள் தங்கள் மீன்களை உப்புடன் சேர்த்துச் சிப்பமாகக் கட்டுவார்கள். இது மக்கள் உப்பின் சுவையைப் பெரிதும் விரும்பினார்கள் என்பதால் அல்ல; மாறாக, இறைச்சியானது கெடாதிருக்க வேண்டுமென்றால் அதில் அவர்கள் உப்பிட வேண்டி யிருந்தது.[11] உங்களில் சிலர் நீங்களாகவே ஆடுகளை வெட்டி, கெட்டு வீணாவதைத் தவிர்ப்பதற்காக, எஞ்சியுள்ள இறைச்சியைப் பதனப் படுத்தி யிருப்பீர்கள், மாட்டிறைச்சியை உப்பைக் கொண்டு பதனமிட்டு அல்லது பன்றியிறைச்சியை உப்பிட்டு[12] பதனப்படுத்தியிருப்பீர்கள்.*

*“நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்” - மற்றும் உப்பானது பதனப் படுத்துகிறது. இது பூமியைப் பற்றிக் கூறுவதென்ன? இது, இந்த பூமியானது சீர்கெட்டுப் போவதாக, நாற்றம் வீசிக் கொண்டிருப்பதாக மற்றும் அழுகிக் கொண்டிருப்பதாகக் கூறுகிறது. இது உலகத்தைப் பற்றிய நமது புரிந்துகொள்ளுதலுக்கு அடிப்படையாக உள்ளது. இது எவ்வளவு கவர்ச்சி கரமானதாகத் தோன்றினாலும், உண்மையில் இது நமது கண்களுக்கு முன்பாகவே, சீர்கெட்டு சிதிலமாகிக் கொண்டுள்ளது. இந்த உலகமானது அழகிய முகத்தை முகத்திரையை அணிந்துள்ளது; ஆனால் இதை நீங்கள் நெருங்கி உற்றுநோக்கினால், இது அத்தனையும் வண்ணக்குழம்பாகவும், முகப் பூச்சுத் தூளாகவுமே உள்ளது. கண்ணைப் பறிக்கும் வண்ணங்களின் கீழாக மங்கிய, சுருக்கம் விழுந்த உண்மைத் தன்மை உள்ளது.*

*இந்த சத்தியமானது வேதாகம போதனையில் மட்டான அறிவு உடைய எவரொருவருக்கும் கூட ஏற்கனவே தெளிவானதாக/உறுதியானதாக உள்ளது. புள்ளியியல் விவரங்கள் அவசியமற்றவைகளாக இருக்கின்றன.[13] நீங்கள் இந்த உலகத்தின் ஒழுக்கத் தராதரங்கள் சரிந்து செல்லுவதை, நேர்மை மற்றும் நாணயம் ஆகியவற்றில் குறைபாட்டை, ஆவிக்குரிய விஷயங்களில் ஆர்வம் குறைவுபட்டிருப்பதைக் கண்ணோக்க இயலும். மேல்பரப்பிற்குக் கீழாகக் காண்பவர்களை ஈர்க்கக்கூடிய எதுவும் இந்த உலகத்தில் இருப்பதில்லை.*

*இதற்கு நேர்மாறாக, வேதாகமம் கிறிஸ்தவர்களைப்பற்றிக் கூறுவ தென்ன? இது, கிறிஸ்தவர்கள் பூமியைப் பதனப்படுத்தும் வல்லமையாக இருக்கின்றார்கள் என்று கூறுகிறது.*

*எனது வாழ்வுக் காலத்தில், பல்வேறு காரணிகள் இந்த பூமியின் நம்பிக்கையாகவும் இரட்சிப்பாகவும் உயர்த்தப்பட்டுள்ளதைக் கண்டிருக் கின்றேன்: அறிவியல், கல்வி, மனோதத்துவம், மனோதத்துவ சிகிச்சை,*

தொழில்நுட்பம், வாழ்வதற்கு மிகச் சிறந்த சூழ்நிலைகள், சட்டமியற்றுதல், சமூக சீர்திருத்தம் மற்றும் இராணுவ பலம் போன்றவை இவ்வாறு உயர்த்தப் பட்டுள்ளன. மனிதகுலமானது, இந்தத் துறைகள் யாவற்றிலும் முன்னேற்றத் தைக் கண்டுள்ளது - சிலவற்றில் தனிச் சிறப்பான முன்னேற்றத்தை கண்டுள்ளது - இருப்பினும் இந்த உலகமானது மிகவும் மோசமாகிக் கொண்டு இருப்பதாகவே காணப்படுகிறது. உண்மையான கிறிஸ்தவர்களே உலகத்தின் ஒரே நம்பிக்கையாக இருக்கின்றார்கள் என்று இயேசு கூறினார்.

ஒரு சிறிய அளவு உப்பானது பெரிய அளவிலான இறைச்சியைப் பதனப்படுத்த முடிவதுபோல், ஒப்புக்கொடுத்தல் உள்ள ஒரு சில கிறிஸ்தவர்கள் சமுதாயத்தைப் பதனப்படுத்த முடியும். ஆபிரகாம் மற்றும் சோதோம் கொமோரா நகரங்களின் அழிவு பற்றிய வரலாற்றை நீங்கள் நினைத்துப் பார்க்கின்றீர்களா (ஆதி. 18)? பத்து - ஒரு சிலராகிய பத்து - பேர் மாத்திரம் நீதிமான்களாக இருந்திருந்தால் அவர்கள் அந்த நகரங்களை அழிவிலிருந்து காத்திருக்கலாம் (வ. 32). பின்வரும் காட்சியைக் கற்பனை செய்யுங்கள்: ஒரு நபர், சோதோம் கொமோராவின் வர்த்தக நிறுவன அலுவலகத்திற்குச் சென்று,[14] "நீங்கள் சாதித்துள்ள பெரும்பான்மையான வைகள் மனதைக் கவரக் கூடியவையாக உள்ளன ஆனால் இந்த மாபெரும் நகரங்கள் இனியும் ஒரு நாளைக் காண வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், மலையில் வாழும் ஆபிரகாம் போன்ற பத்து நபர்களை நகரத்தினுள் கொண்டுவந்து சேர்ப்பது நல்லது'' என்று கூறுகின்றீர்கள். அவர்கள் எவ்வாறு பதில்செயல் செய்திருப்பார்கள்? அவர்களின் எண்ணப் போக்கு எப்படியிருப்பினும், ஆபிரகாமைப் போன்ற பத்து மனிதர்கள் அந்த நகரங்களை அழிவிலிருந்து காத்திருப்பார்கள்.

நாம் ஒரு நேர்மறை முன்னெதிர்நோக்குவதற்காகச் சற்று தாமதிப் போம். (நாம் நமது அடுத்த பாடத்தில் பேசவிருக்கிற) வெளிச்சம் என்பது தான் செய்வதைக் கொண்டு செல்வாக்குச் செலுத்துகிறதாக இருக்கையில், உப்பானது தான் என்னவாக இருக்கிறதோ அதைக் கொண்டு செல்வாக்குச் செலுத்துகிறதாக இருக்கிறது. நீங்கள் அநேகமாக, நான் விவரித்துள்ள பதனப்படுத்தும் தன்மையை ஒரு சிறிய அளவில் கண்டிருக்கலாம். நீங்கள் தேவனுக்கு உண்மையான பிள்ளையாக இருக்கின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம் (நீங்கள் அவ்வாறாக இருக்கின்றீர்கள் என்று நான் எதிர் பார்ப்புடன் நம்புகின்றேன்). நீங்கள் கிறிஸ்தவத்தை ஆர்ப்பாட்டப் படுத்துவதில்லை, ஆனால் நீங்கள் யார் என்றும் நீங்கள் எதற்கு நிலை நிற்கின்றீர்கள் என்றும் மக்கள் அறிகின்றார்கள். நீங்கள் ஒரு அறைக்குள் நடந்து செல்லுகையில், அதற்குள் பேசப்படும் பேச்சுக்களும் நகைச்சுவை களும் நிறுத்தப்படும் என்பது சாதாரணமாக நடைபெறுகிறது. மக்கள் பின்வருமாறு கூறி உங்களைச் சங்கடப்படுத்தலாம்: "நாம் அந்தக் கதையைக் கூற இயலாது. இப்போது இங்கிருப்பவரின் பெயர் என்ன? [அவர் இங்கிருப்பதால் நாம் அந்தக் கதையை கூற முடியாது]!'' நீங்கள் இருக்கிறீர்கள் என்பது - நீங்கள் இருக்கின்றீர்கள் என்ற உண்மை மாத்திரமே - ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துகிறது. உப்பு தான் என்னவாக உள்ளதோ, அதன் மூலம் செல்வாக்கை ஏற்படுத்திக் கொள்ளுகிறது.

இந்த உலகத்தாரால் ''சாதாரண'' மக்கள் என்று கருதப்படுபவர் களிடத்தில் இயேசு இதைக் கூறினார் என்பதை நான் மீண்டும் உங்களுக்கு வலியுறுத்த அனுமதியுங்கள். மூலமொழிப் பிரதியில், ''நீங்கள்'' என்ற வார்த்தை வலியுறுத்தப்பட்டுள்ளது;[15] இயேசு, "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக் கிறீர்கள்'' என்று கூறினார். அவரது கூற்றானது, உள்ளடக்குவதாகவும், வெளிவைப்பதாகவும் உள்ளது: இது அவரது பின்பற்றாளர்கள் யாவரையும் உள்ளடக்குகிறது மற்றும் அவரது பின்பற்றாளர்கள் தவிர மற்ற யாவரையும் வெளிவைக்கிறது. இதை இயேசு, தமது நாட்களில் இருந்த மத, நிதிநிறுவன, சமூக அல்லது அரசியல் தலைவர்களிடத்தில் கூறவில்லை, ஆனால் அதற்கு மாறாக அவரைப் பின்பற்ற விரும்பிய ''சாதாரணமான'' பூமியின் உப்பாயிருக்கும் மனிதர்களிடம் கூறினார் என்பதை நினைவில் வைக்கவும்.

உங்களை நீங்களே குறைந்த விலைக்கு விற்றுப் போடாதீர்கள். நீங்கள் கிறிஸ்தவராயிருந்தால், நீங்கள் விசேஷித்தவராக - மிகவும் விசேஷித்தவராக - இருக்கின்றீர்கள்!

## ஒரு அறைகூவல்

இயேசு, "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்'' என்று கூறியபோது, இது ஒரு பாராட்டாக இருந்தது மட்டுமின்றி, ஒரு அறைகூவலாகவும் இருந்தது. உப்புக்குத் *தனிச் சிறந்த* ஒரு *குணம்* இருப்பதால், அது மதிப்புள்ள தாகவும், பதனப்பொருளாயிருக்கும் பண்புள்ளதாகவும் உள்ளது. கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமக்கும் கூட ஒரு தனிச்சிறந்த குணம் தேவைப்படுகிறது. நாம் இந்த உலகத்தில் இருந்து *மாறுபட்டவர்களாய்* இருக்க வேண்டும் என்று கூறுதலானது இந்த குணத்தை வெளிப்படுத்தும் ஒரு வழிமுறையாக உள்ளது.

> நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், ... உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:2).
>
> ... உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிற வன் தேவனு க்குப் பகைஞனாகிறான் (யாக். 4:4).
>
> உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை (1 யோவா. 2:15).

உப்பானது இறைச்சியின் அதே பொருட்களால் ஆனதாக இருந்தால், அது இறைச்சியைப் பதனப்படுத்த இயலாது. நாம் உலகத்தாரைப் போன்றவர்களாயிருந்தால், நம்மிடத்தில் பதனப்படுத்தும் குணம் எதுவும் இராது. இது நாம் விநோதமானவர்களாக[16] இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்துவது இல்லை, ஆனால் நாம் தனிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்துகிறது.

மக்கள் நம்மைக் கண்ணோக்கிப் பார்த்து - நாம் செய்கின்றவைகள்,

*நாம் பேசும் வழிமுறை, நாம் கலந்துரையாடும் தலைப்புக்கள், நாம் உடை அணியும் விதம், நமது சிரமங்களை நாம் சந்திக்கும் வழிமுறை ஆகியவற்றை வைத்து - நாம் கிறிஸ்தவர்களாய் இருக்கின்றோம் என்று கூறமுடியுமா? கிறிஸ்தவராயிருத்தல் என்பது, நாம் நமது குடும்பங்களை எவ்வாறு நடத்துகின்றோம், நாம் கடைக்காரர்களிடத்தில் எவ்வாறு பேசுகின்றோம், நாம் நமது விளையாட்டுக்களை எவ்வாறு விளையாடுகின்றோம் என்பவற்றில் செயல்விளைவுகளை ஏற்படுத்த வேண்டும்.*

*இயேசு, "நீங்கள் சபைக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று கூறவில்லை, ஆனால் அதற்கு மாறாக, "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று கூறினார் என்பதைக் கவனியுங்கள். பெரும்பாலான சபையின் செயல்பாடுகள் சபை கூடிவரும் கட்டிடங்களுக்குள்ளேயே நடைபெறுகின்றன என்பதை கருத்துக் கணிப்புகள் சுட்டிக் காண்பிக்கின்றன. நாம் மற்ற மக்கள் இருக்கும் இடத்தில் "உப்பாக" இருக்க வேண்டியது அவசியமாக உள்ளது: கடைவீதிகளில், பள்ளிக்கூட அறையில், அலுவலகத்தில். இயேசு பாவிகளுக்குச் சிநேகிதராக இருந்தார் (மத். 11:19). Out of the Salt Shaker & into the World[17] என்று அழைக்கப்படும் புத்தகமானது, கிறிஸ்தவர்கள் மற்றவர்கள் மீது நேர்மறையான செல்வாக்கைக் கொண்டிருக்கக்கூடிய சமுதாயத்தில் கலந்து பழக வேண்டும் என்று வற்புறுத்துகிறது.*

*நீங்கள் எங்கு சென்றாலும், நீங்கள் எங்கு இருந்தாலும், நீங்கள் தேவனுடைய பதனப்படுத்தும் வல்லமையாக இருக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டு இருக்கின்றீர்கள். நீங்கள் வீடுகளைச் சந்திக்கலாம், பல இடங்களுக்குச் செல்லலாம், தேவனுடைய பிள்ளை என்ற வகையில் தனிச்சிறந்த தொடர்புகளை ஏற்படுத்தலாம். அதுவே உங்களுக்கான தேவனுடைய விசேஷித்த இடமாக, செல்வாக்கிற்கான உங்களின் விசேஷித்த இடமாக உள்ளது. "பூமிக்கு உப்பாக" இருத்தல் என்பதன் அறைகூவலை ஒருக்காலும் மறந்து விடாதீர்கள்.*

*வசனம் 13ன் கடைசிப் பகுதியில், இயேசு இந்த அறைகூவலின் தீவிரத் தன்மையை வலியுறுத்தினார்: "... உப்பானது சாரமற்றுப் போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது." KJVயானது உப்பு அதன் "சாரத்தை" இழந்து போகுதல் பற்றிப் பேசுகிறது. NIVயானது, "உப்பானது தனது உப்புத் தன்மையை இழந்துபோனால், அது மீண்டும் எப்படி உப்பாக்கப்பட முடியும்?" என்று கூறுகிறது.*

*நாம் சுத்தமான வெள்ளையான உப்பை, பைகளில் வாங்குவதால், நம்மில் பெரும்பாலானவர்கள், உப்பு எப்படி தனது சுவையையும் உப்புத் தன்மையையும் இழந்துபோக முடியும் என்பதைப் புரிந்து கொள்ளுவதில் சிரமம் அடைகின்றோம். உப்பு எப்போதுமே உப்புச்சுவையுள்ளதாகவே இருக்கப்போகிறது. உப்பின் ஒரே ஒரு துளிமாத்திரம் விடப்பட்டிருப்பினும், அது உப்புச்சுவையுள்ளதாகவே இருக்கும். ஆயினும் வேதாகமம் எழுதப்பட்ட காலங்களில் இருந்த உப்பானது, கடல்நீரை ஆவியாக்குவதின் விளைவாக ஏற்பட்டதாயிருந்தது. அந்த உப்பில் இயற்கையாகவே அசுத்தங்கள் கலந்திருந்தன. உப்பானது தரையிலிருந்து சுரண்டி எடுக்கப்படும்போது,*

மணல் அல்லது அழுக்கு என்பவை அந்த உப்புடன் கலந்திருந்தன. இதன் மூலம் விளைந்த உப்பு அதன் கூற்றுப் பொருளை வெளிப்படுத்தும்படி செயல்பாடு மேற்கொள்ளப்பட்டால், அதில் உள்ள சோடியம் குளோரைடு[18] என்ற பகுதிப் பொருளானது அதிகமாகக் கசியக்கூடும். எஞ்சியுள்ளது பூமியைச் சுத்தமாக்கப் போதுமான உப்பாக இருக்கும், ஆனால் அது மதிப்புள்ளதாக இராது. இந்த "உப்பு" தனது தனிச்சிறப்பான குணத்தை இழந்ததாக இருக்கிறது.

பலஸ்தீன நாட்டில் நல்ல நிலம் என்பது ஒரு ஊக்கமளிக்கும் வெகுமதி போன்று இருந்தது. அவர்கள் கிடைத்திருந்த ஒவ்வொரு அங்குல நிலத்தையும் பயிர்களின் உற்பத்திக்காகப் பயன்படுத்தினார்கள். வயல்நிலங்களில் குறுக்கே கடந்து செல்வதற்குக் குறுகிய பாதைகள் விவசாயிகளினால் பயன்படுத்தப்பட்டிருந்தன. மக்கள் "உப்புத்தன்மையை இழந்துபோயிருந்த உப்பை" வயலில் கொட்டத் துணியாது இருந்தார்கள், ஏனென்றால், அது மண்ணின் வளத்தை அழித்துவிடக்கூடும். (நான் அந்தப் பாடத்தை, வீட்டில் செய்த ஐஸ்கிரீமைக் குளிர்விப்பதற்கு, உப்புப் பனிக்கட்டியையும் தண்ணீரையும் பயன்படுத்திய பின்பு அவற்றைப் புல்வெளியில் கொட்டிய போது கடினமான வழிமுறையில் கற்றுக்கொண்டேன்.) அதற்குப் பதிலாக, அவர்கள் அந்த உப்புக்குவியலை பாதைகளில் கொட்டுவதுண்டு, அங்கு அது எவ்வித சேதத்தையும் ஏற்படுத்தாது. அங்கு அது "மனிதர்களால் கால்களின் கீழ் மிதிக்கப்படும்."

இந்த விவரிப்பானது, ''பூமிக்கு உப்பு'' என்ற வகையில் தமது சாத்தியக்கூற்றை உணர்ந்தறிய முயற்சி செய்யாத கிறிஸ்தவரைப் பற்றிய இயேசுவின் கவலைக்குரிய விளக்கமாக உள்ளது. அப்படிப்பட்ட நபர் "உதவாக்கரையாக" இருக்கின்றார் என்பதே அவரது உறுதியான முடிவாக உள்ளது.

## முடிவுரை

உப்பும் வெளிச்சமும்: இந்த சாதாரணப் பொருட்கள் மதிப்புமிக்க பாடங்களைப் போதிப்பதற்கு இயேசுவால் பயன்படுத்தப்பட்டன. நாம் "வெளிச்சமாக" இருத்தல் பற்றி அடுத்த பிரசங்கத்தில் படிப்போம்; இந்தக் கணத்தில், நாம் யாவரும் "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்'' என்ற வார்த்தைகளால் மனங்கவரப்பட்டிருப்போம் என்று நம்புகின்றேன். இயேசு அந்த வார்த்தைகளைப் பேசியபோது, நமக்கு மாபெரும் பாராட்டு ஒன்றை அளித்தார். நாம் கர்த்தருக்கு விசேஷித்தவர்களாய் இருக்கின்றோம்; நமக்கு மதிப்பு இருக்கிறது. நாம் ஒருக்காலும் நம்மை குறைந்த விலைக்கு விற்றுவிடாதிருப்போமாக.

அவர் நமக்கு ஒரு மாபெரும் அறைகூவலையும் கொடுத்தார். ஒரு மனிதனை "உதவாக்கரை" என்று கூறுவதைக்காட்டிலும் அம்மனிதருக்கு மாபெரும் அவமானம் வேறெதுவும் இருக்க முடியாது. நான் ஆவிக்குரிய வகையில் "உதவாக்கரையாக" இருக்க விரும்புவதில்லை, நீங்கள் அவ்வாறு இருக்க விரும்புகின்றீர்களா? நாம் ஒரு தனிச்சிறந்த வாழ்வை வாழ,

*உலகிலிருந்து மாறுபட்டவர்களாயிருக்கத் தீர்மானிப்போம். நாம் யாவரும் "பூமிக்கு உப்பாயிருக்க" தேவன் தாமே நமக்கு உதவுவாராக!*[19]

---

*குறிப்புகள்*

[1]*"குறைவான விலைக்கு விற்றுவிடுதல்" என்பது சில பொருட்களை அவற்றின் பெருமதிப்புக்கும் குறைவான (வழக்கமாக மிகக்குறைவான) விலைக்கு விற்பதைப் பற்றிக் கூறுகிறது. ஒரு நபர் "தம்மைக் குறைவான விலைக்கு" விற்றுப் போடும்போது, அவர் தமது உண்மையான மதிப்பை உணரத் தவறுகின்றார். ஒரு கிறிஸ்தவர், "தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல்" (ரோமர் 12:3) இருப்பதில் கவனமாக இருக்க வேண்டும். அதே வேளையில், அவர் தாம் தகுதி யற்றவர் என்று முடிவு செய்துவிடக் கூடாது. நமது மதிப்பானது நமது சொந்தத் தகுதியிலிருந்து பெறப்படுவதாக இல்லாமல், தேவன் நம்மீது வைத்துள்ள மதிப்பிலிருந்து பெறப்படுவதாக உள்ளது. "குறைவான விலைக்கு விற்று விடுதல்" என்ற சொல்விளக்கமானது நீங்கள் வாழ்கின்ற பகுதியில் அறியப்படாததாக இருந்தால், உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமானதாக உள்ள இதற்குச் சமமான அர்த்தம் கொண்டுள்ள சொல்விளக்கத்தை நீங்கள் பயன்படுத்தலாம். [2]இரத்த ஓட்டம் என்பது அடிப்படையில் ஒரு உப்புத் திரவமாக உள்ளது. அமெரிக்காவில், மருத்துவக் காரணங்களுக்காகச் சில நோயாளிகள் உப்புக் கலந்த உணவை உண்பதைத் தவிர்க்க வேண்டும் என்று கூறப்படுகின்றார்கள். ஆயினும், "உப்பில்லாத" உணவு என்று அழைக்கப்படுபவற்றில் கூட சற்றே உப்பு சேர்க்கப் படுவதுண்டு. [3]விதிப்படியாக, இந்தப் பாடத்தொடரில் நான் ஒவ்வொரு பாடத்திற்கும் தொடர்புடைய ஒரு பிரசங்கத்தைக் கொண்டிருக்கின்றேன், ஆனால் சிலவேளை களில் நான் இரு பிரசங்கங்களையும் கொண்டுள்ளேன். இவற்றில் ஒன்றை ஞாயிற்றுக்கிழமை காலை வேளையிலும் இன்னொன்றை ஞாயிற்றுக்கிழமை மாலையிலோ அல்லது சபைகூடிவரும் பிற வேளைகளிலோ பிரசங்கிக்கலாம். [4]இந்தப் பாராட்டுச் சொல்விளக்கமானது சுயவிளக்கம் உடையதாகும். நீங்கள் வாழும் பகுதியில் மக்கள் இந்தச் சொல்விளக்கத்தைப் பயன்படுத்துவது இல்லை யென்றால், நீங்கள் "உலகின் சில பகுதிகளில், அவர் பூமிக்கு உப்பாக இருக்கின்றார் என்று கூறுவது ஒரு நபருக்கு நீங்கள் தரக்கூடிய மாபெரும் பாராட்டாக உள்ளது" என்று விளக்கம் தரலாம். [5]நீங்கள் வாழும் பகுதியில் இந்தச் சொல்விளக்கம் பயன்படுத்தப் படுவதில்லை யென்றால், "அவர் பூமிக்கு உப்பாக இருக்கின்றார்" என்ற சொல்விளக்கத்தைப் போன்றே இதையும் பயன்படுத்துங்கள் (முந்திய குறிப்பைக் காணவும்). [6]யோபு, தமது "நண்பர்களின் ஆறுதலானது" உப்பற்ற உணவுபோல் இருந்த தாகக் கூறினார். கொலோசெயர் 4:6, உப்பு ருசியைக் கூட்டுவது பற்றி எடுத்துரைக்கும் இன்னொரு வேத வசனப் பகுதியாக உள்ளது, அது நமது பேச்சானது "உப்பினால் சாரமேறினது" போல் இருக்க வேண்டும் என்று கூறுகிறது. நாம் நமது பேச்சை ருசியுள்ளதாக்க முயற்சி செய்ய வேண்டும்.* [7]A. C. Dixon, quoted in Leslie G. Thomas, *The Sermon on the Mount: A Series of Studies in the Moral and Religious Teaching of Jesus* (Nashville: Gospel Advocate Co., 1958), 22. [8]"Flat" *என்றால் "ருசியற்றது" என்று அர்த்தம் புரிந்துகொள்ளக்கூடிய பகுதியில் நீங்கள் வாழ்ந்தால்,* "ends up flat" *என்று நீங்கள் கூறலாம்.* [9]*இந்தச் சொல்விளக்கம், "ஒருவர் செய்யவிரும்பாத விஷயத்தைச் செய்யும்படி அவரை நீங்கள் கட்டாயப்படுத்த முடியாது" என்று அர்த்தப்படுகிறது.* [10]*அழுகிய இறைச்சி பற்றிய சுய அனுபவம் ஒன்று உங்களுக்கிருந்தால், அந்தக் கதையை உங்கள்*

*உரையைக் கேட்பவர்களுடன் நீங்கள் பகிந்து கொள்ளலாம்.*

*[11]உலர்த்துதல் என்பது இறைச்சியைப் பக்குவப்படுத்தும் இன்னொரு முறையாக உள்ளது. உலர்ந்த இறைச்சியானது இறைச்சியற்ற உணவை விட மேம்பட்டதாகும். [12]அமெரிக்காவின் சில பகுதிகளில், சில இடங்களில் இது இன்னமும் ஒரு பொதுவான நடைமுறையாக உள்ளது. [13]இருந்தபோதிலும் உலகில் நீங்கள் வாழும் பகுதியைப் பற்றிய புள்ளி விவரங்களைக் கொடுக்க நீங்கள் விரும்பலாம்: உங்களைச் சுற்றியுள்ள உலகத்தில் தேவபக்தியின்மை வளர்ந்துவருதல் பற்றிய விவரங்களைக் காண்பிக்கும் புள்ளி விவரம். [14]அமெரிக்காவில் பெரும்பாலான நகரங்களில் வர்த்தக நிறுவன அமைப்பு உள்ளது, இது அந்தப் பகுதியில் உள்ள வியாபாரிகள் மற்றும் செல்வாக்குள்ள மனிதர்களைக் கொண்டதாக உள்ளது. இது ஒரு ஆளும் அமைப்பாக இருப்பதில்லை என்றாலும், இது அந்தப் பகுதியின் வளர்ச்சி மற்றும் வளத்தை மேம்படுத்த அதிகம் பணிசெய்கிறது. [15]கிரேக்க வினைச் சொற்கள் யாவற்றிலும் உள்ளது போன்றே, மத்தேயு 5:13ல் உள்ள "இருக்கிறீர்கள்" என்ற வினைச் சொல்லானது புரிந்துகொள்ளக் கூடிய எழுவாயைக் கொண்டுள்ளது (இவ்விஷயத்தில், "நீங்கள்"). வாக்கியத்தின் தொடக்கத்தில், "நீங்கள்" என்பதற்கான கிரேக்க வார்த்தையின் கூடுதலானது அவ்வார்த்தையின் மீது முக்கியத்துவத்தை வைப்பதன் செயல்விளைவைக் கொண்டுள்ளது. [16]விருப்பமிருந்தால் நீங்கள், உங்கள் சமுதாயத்தில் உள்ள சில பிரிவினரின் வினோதமான நடக்கை மற்றும்/அல்லது உடையணியும் பழக்கம் ஆகியவற்றின் உதாரணங்களைப் பயன்படுத்தலாம். நான் ஒருமுறை இந்தப் பாடத்தைப் பிரசங் கித்தபோது, மக்கள் பச்சை நிறமான கூர்முடிகளை அணியும் பழக்கம் இருந்தது என்பது அப்போதைய உண்மையாக இருந்தது; எனது உரையைக் கேட்டவர்களில் பலர் இவ்வகைப்பட்ட மக்களைத் தொலைக்காட்சியில் பார்த்து இருந்தார்கள். நான், "இது, நாம் பச்சை நிறமான கூர்முடிகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று அர்த்தப்படுவதில்லை; இது நாம் தனிச்சிறந்தவர்களாய் இருக்க வேண்டும் என்றே அர்த்தப்படுத்துகிறது."* [17]Rebecca Manley Pippert, *Out of the Salt Shaker & into the World* (Downers Grove, Ill.: InterVarsity Press, 1979). *[18]சோடியம் குளோரைடு என்பது சாதாரண உப்புக்கான அறிவியல் பெயராகும். [19]நீங்கள் இந்தப் பிரசங்கத்தைப் பயன்படுத்தும்போது, உங்கள் உரையைக் கேட்பவர்களை, சரியான வகையிலான செல்வாக்குக் கொண்டிருக்க அவசியமானவை எவையென்றாலும் அவற்றைச் செய்யும்படி ஊக்கப்படுத்த நீங்கள் விரும்பலாம். சிலர் விசுவாசித்தல் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றின் மூலமாக கிறிஸ்தவர்களாவது அவசியமாக இருக்கலாம் (மாற். 16:16). உண்மையற்ற கிறிஸ்தவர்கள் மனந்திரும்புதல், அறிக்கையிடுதல் மற்றும் ஜெபம் ஆகியவற்றின் மூலமாக மீண்டும் கட்டியெழுப்பப்படுதல் அவசியமாயிருக்கிறது (அப். 8:22; யாக். 5:16).*